**ஏரி, குளங்களில் தண்ணீரின் தரத்தினை சோதிப்பதற்கான புதிய தொழில்நுட்பம்**

# அமிர்தா பல்கலைக்கழக மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு 'ஐடியேட் சேலஞ்ச்' விருது

கோவை, ஜூன் 5–

ஏரி, குளங்களில் தண்ணீரின் தரத்தினை சோதிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அமிர்தா பல்கலைக்கழக மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு, 'ஐடியேட் சேலஞ்ச்' விருது கிடைத்துள்ளது.

அமிர்தா பல்கலைக்கழகத்தின் பொறியியல் மாணவர்கள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகள் போன்றவற்றில், நீரின் தரத்தினை பரிசோதிப்பதற்கான அதிக ஆற்றல்மிக்க மற்றும் துல்லியமான முறையை கண்டறிந்துள்ளனர். இதற்காக, உலகின் மிகப் பெரிய நெட்வொர்க்கிங் நிறுவனமான சிஸ்கோ சார்பில், 'ஐடியேட் தி கிரேட் டிஜிட்டல் இந்தியா சேலஞ்ச்' என்னும் விருதைப் பெற்றுள்ளது.



## ரூ.2.5 லட்சம் ரொக்கப்பரிசு

ஐஐடிகள் உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங் களுடனான கடுமையான போட்டிக்கு இடையே, இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. வெற்றிப் பெற்ற குழு, ரூ.2.5 லட்சம் ரொக்கப்பரிசையும் வென்றுள்ளது. இந்தக் குழுவில் அகஷ் பாலசந்திரன், சூரியா முருகையன், பார்த்தசாரதி ஆர். மற்றும் முரளி சிவா ஆகியோர் அடங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் அமிர்தா பல்கலைக்கழகத்தின் அமிர்தா ஸ்கூல் ஆப் இன்ஜினியரிங்கின் மூன்றாமாண்டு மாணவர்களாவர். ஐஐடி காரக்பூர் மற்றும் ஐஐடி பெங்களூரு ஆகியவை, முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசினை வென்றுள்ளன.

உலகெங்கிலும் ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்தேக்கங்கள் போன்ற பெரிய நீர்நிலைகள் வழக்கமாக கண்காணிக்கப்படுகின்றன. மற்றும் நீர் சுரண்டப்படுவது மற்றும் மாசுப்படுவதற்கான ஒரு அளவினை வைப்பதற்காக அவற்றின் நீர் தரப்பகுப்பாய்வு செய்யப்படுகிறது. நடப்பில் உள்ள கைமுறை மாதிரியாக்க உத்திகள் கணிசமான அளவிலான நேரம் மற்றும் வளங்களை எடுத்துக்கொள்கிறது.

## ரிமோட் சென்சிங் முறை

அவை தரவு சேகரிப்பில் துல்லியத்தன்மை இல்லாமைக்கான சாத்தியக் கொண்டிருக்கின்றன. வழக்கமான மாதிரியாக்க முறையில் இருக்கும் இந்தக் குறைபாடுகளை களைவதற்காக, ஒரு ரிமோட் சென்சிங் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது சென்சார் முனையங்களை செயல்படுத்தாமலேயே நீரின் தரத்தினைக் கண்காணிப்பதை சாத்தியமாக்கியுள்ளது.

பிஎச் அளவு, கரைந்த ஆக்சிஜன், வெப்பநிலை மற்றும் கடத்துத்தன்மை போன்ற நீரின் பண்புகளை ஒரு நீர்நிலையின் பல்வேறு இடங்களில் சேகரிப்பதற்கான ஒரு புதுமையானத் தொழில்நுட்பத்தை எமது மாணவர்கள் முன்மொழிந்துள்ளனர். இதன்மூலம் ஒரு மாதம் அல்லது ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே நீர்நிலையின் தர நிலையைக் கண்டறிய முடியும். இந்த புதிய தொழில்நுட்பம் உலகிலேயே முதன்முதலாக நீரின் தரத்தினை அளவிடவும் முன் கணிப்பதற்குமான ஒன்றாகும்.

இந்த அற்புதமான சாதனைக்காக, எமது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமிர்தா பல்கலைக்கழகத்தின் அமிர்தா ஸ்கூல் ஆப் இன்ஜினியரிங்கின் தலைவர் டாக்டர் சசாங்கன் ராமநாதன் இவ்வாறு கூறினார்.

## ஓராண்டு உழைப்பு

குழுவின் தலைவரான மாணவர் சூரியா முருகையன் கூறுகையில், வளர்ந்து வரும் பொறியாளர்களாக, நாங்கள் நிலையாக இருக்கக்கூடிய உலகத்திற்கான ஏதோ ஒன்றினை கண்டுபிடிக்க விரும்பினோம். சர்க்யூட் பிரேக்கர்ஸ் என்னும் குழுவை நாங்கள் உருவாக்கினோம். இந்த ஸ்மார்ட் வாட்டரை உருவாக்க இரவு பகலாக ஓராண்டுக்கு மேல் உழைத்தோம்.

சிஸ்கோவின் 'கிரேட் டிஜிட்டல் இந்தியா சேலஞ்ச் ஐடியேட்" விருதுக்கு, இந்தியாவின் 40 முதன்மை பல்கலைக் கழகங்களில் இருந்து மாணவர்கள் பங்கேற்றார்கள். எட்டுக் குழுக்கள் இறுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் மூன்று வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டன, அமிர்தா பல்கலைக் கழகத்திலிருந்தான குழு முதல் பரிசினைப் பெற்றது என்றார்.